**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 15.04.2026**
**OS. No. 127/2023**
**வழக்கு சாட்சி CW.1–பிரசாந்த் , த/பெ.அங்கமுத்து**

(நீதிமன்ற அனுமதியுடன் சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) நான் 7 வருடங்களாக கிராம நிர்வாக அலுவலராக உள்ளேன். நான் விசாரணை செய்வதற்கு முன்பு அதற்கான நடவடிக்கை எதுவும் தனியாக அலுவலக ஆவணங்களில் தொடரவில்லை. எங்கள் அலுவலகம் சார்பாக எந்த ஒரு விசாரணையும் செய்யவேண்டும் என்றால் அதற்கான நடவடிக்கை தொடரவேண்டும் என்றால் அவ்வாறான விதிமுறையானது வருவாய் ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யும் போது தான் உள்ளது, கிராம நிர்வாக அலுவலர் வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு அவ்வாறான விதிமுறை இல்லை.

2) சா.சா.ஆ.1 வாக்குமூலமானது எந்தெந்த தேதியில் விசாரணை செய்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் யார் யாரை விசாரணை செய்தேன் என்றோ அல்லது விசாரணை செய்தவர்களிடம் வாக்குமூலம் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 16/1–395, ராஜ தியேட்டர் வடக்கு, மேச்சேரி கிராமம் என்ற நிலத்தில் அமைந்துள்ள வீடு யாருக்கு சொந்தமானது என்று விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அந்த வீட்டுக்கு அருகிலுள்ள நபர்களை பெயர் குறிப்பிட்டு விசாரணை செய்ததாக அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் விசாரணை செய்தேன்.

3) 17/1–139A, நெசவாளர் காலணி, கந்தசாமிபுறம், மேச்சேரி கிராமம் என்ற நிலத்தில் அமைந்துள்ள வீடு யாருக்கு சொந்தமானது என்று விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அந்த வீட்டுக்கு அருகிலுள்ள நபர்களை பெயர் குறிப்பிட்டு விசாரணை செய்ததாக அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால்

விசாரணை செய்தேன். மணிமேகலை என்பவரது அடையாள ஆவணங்களை பெற்று பார்த்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பான ஆவணங்களை எந்த தேதியில் பெற்று பார்த்தேன் என்றோ, அது என்ன ஆவணங்கள் என்றோ, முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றும், அது சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4) மணிமேகலையில் வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளதில் அவரது புகைப்படம் எதுவும் நான் ஒட்டவில்லை என்றால் சரிதான். மணிமேகலையின் கணவர் பெயர் செல்வராஜ் என்று குடும்ப அட்டையில் உள்ள விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் அவர் கொடுத்த குடும்ப அட்டையில் கோவிந்தராஜ் என்று தான் உள்ளது. மணிமேகலை என்பவரை நான் விசாரிக்கவில்லை என்றும், வழக்கு சம்மந்தமாக வேறு எந்த நபரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வந்த சம்மன் குறித்தோ, அது தொடர்பாக நான் மேற்கொண்ட விசாரணை குறித்தோ எழுத்துபூர்வமாக தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை, வாய்மொழியாக தெரிவித்துள்ளேன்.

ஒம்/–திரு. M.செல்வம்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
மேட்டுர்.